









# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 1 இதழ் 30 23.07.2025





The 3 Peetathipathies during the sapthathi vaibhavam of 46th Jeer of Ahobila mutt at Srirangam

# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய முத்துக்கள் உபதேசங்கள்



# முத்துக்கள்

*1.*

**வேதமும் வேள்வியும் விண்ணும் இருசுடரும் ஆதியுமானான்
அருள் தந்தவா நமக்கு போதலரும் புன்னைசூழ் புல்லாணி
கைதொழுதேன் ஓதமும் நானும் உறங்காதிருந்தேனே.**

**ஸ்ரிய:பதியான ஸ்ரீமந்நாராயணன் தன் அடியார்களை உகந்து ரக்ஷிக்கவேண்டும் என்பதற்காக தாமே உகந்து மத்ஸ்யகூர்மாதி அவதாரங்களை எடுத்தான். எடுக்கப்பட்ட பத்து அவதாரங்களில் இராமாவதாரமும் கிருஷ்ணாவதாரமும் தான் பூர்ணாவதாரங்கள். மற்றவைகள் அம்ஸாவதாரங்கள். எப்படியிருந்தாலும் எல்லா அவதாரங்களும் ஆஸ்ரிதர்களை காப்பாற்றுவதற்காக எடுக்கப்பட்டவை. ஆனால் பூர்ணாவதாரத்தில் எம்பெருமானுடைய ஸ்ரணாகதரக்ஷண தர்மத்தை முழுவதுமாக அநுபவிக்கமுடியும். அதிலும் இராமாவதாரத்தில் பாரணாகதி தர்மம் தான் முதன்மையாகப் பேசப்படுகிறது. அதில் விபீஷண ஸ்ரணாகதி மிகவும் முக்யமானதொன்று. இந்த பஸரணாகதி யாருக்காக ஏற்பட்டது என்றால் ஜீவர்களான ஸரணாகதர்கள் ஸரண்யனான எம்பெருமானை அடையவேண்டும் என்பதற் காக ஏற்பட்டது. விபீஷணன் ஸர்வலோக ஸரண்யாய ராகவாய மஹாக்மநே என்று ராகவனை ஸரணடைந்தான்.**

**இப்பொழுது சக்ரவர்த்தித் திருமகன் ஸமுத்ரத்தை கடக்க வேண்டும். அதற்கு கடலரசன் வழிவிடவில்லை, என்செய்வது என்று இராமபிரான் விபீஷணனைக் கேட்க, ஸமுத்ரம் ராகவோ ராஜா ஸரணம் கந்துமர்ஹதி ஸமுத்ரராஜாவை ஸரணாகதி கூறுகிறான். பண்ணால் கடக்கலாமென்று விபீஷணன் ஸரண்யன் ஸரணாகதனை ஸரணாகதி பண்ணலாமா? என்றால் ஸகல கார்ய ஸித்திக்கு ஸ்ரணாகதி தான் சிறந்த வழி என்பதை இது எடுத்துக் காண்பிக்கிறது. அப்படிப்பட்ட ஸரணாகதியின் பெருமைகள் ஸ்ரீமத்திருக்குடந்தை ஆண்டவனால் பலவாறாக உபந்யாஸங்கள் செய்யப்பட்டுள்ளது.**

.............................................................................

## 2

*சாந்தேந்து மென்முலையார் தடந்தோள் புணரின்ப வெள்ளத்து*
*ஆழ்ந்தேன் அருநரகத் தழுந்தும், பயன்படைத்தேன் போந்தேன்*
*புண்ணியனே! உன்னையெய்தி யென்தீவினைகள் தீர்ந்தேன்*
*நின்னடைந்தேன், திருவிண்ணகரானே!*

*ஸ்ரிய:பதியான ஶ்ரீமந்நாராயணன் தன்னால் படைக்கப்பட்ட ஜீவராசிகளைத் தன்னிடத்திலேயே வரவழைத்துக் கொள்வதற்கு சிறந்த இரண்டு உபாயங்களைக் காண்பித்துள்ளான். ஒன்று பக்தியோகம், மற்றொன்று ஸரணாகதி. பக்தியோகமானது மிகவும் கடினமானது. ப்ரபத்தியானது எளிமையானது. ஒருமுறை செய்தால் போதுமானது. கோடிக்கணக்கான பிறவிகளை எடுத்து பாவ புண்ணியங்களை செய்துகொண்டு மறுபடியும் தான். அப்படியென்றால் இந்த நான்கையும் அடைபவர்கள் உலகில் இல்லையா?*

*அல்லது அதை அடைவதற்கான வேறு வழிகள் இல்லையா? என்றால் கண்டிப்பாக வழி இருக்கிறது. இதைச் செய்தால் கண்டிப்பாக நான்கையும் ஒருவன் பெறலாம். அந்த வழியானது கோவிந்த! புண்டரீகாக்ஷ! ரக்ஷமாம் ஸரணாகதம் என்று எம்பெருமான் திருவடிகளில் ப்ரபத்தி செய்துகொள்வது. ஸகல காம ப்ரதா மரணாகதி: எல்லா பலன்களையும் கொடுக்கக்கூடியது ஸரணாகதி:*

*****************************************************************

## 3

*துய்ய மனத்தர் துறையணுகாத துணையிலியேன்*

*ஐய மறுத்துனது ஆணைகடத்தல் அகற்றினை நீ*

*கையமர் சக்கரக் காவல! காக்கும் திருவருளால்*

*வையமளந்த வடிக்கீழ் அடைக்கலம் வைத்தருளே.*

*ஸ்ரியபதியான ஸ்ரீமந்நாராயணனால் படைக்கப்பட்ட ஜீவராஸிகளில் மனிதப் பிறவியானது மிகவும் உயர்ந்தது. ஆனால் அந்த பிறவியில் தான் மனிதன் தர்மத்தை மறந்து தீயவழியில் சென்று பாவங்களைச் செய்கிறான். அதனால் பிறவித் துயரானது தொடர்ந்து வந்துகொண்டே இருக்கிறது. எம்பெருமானிடத்திலே ப்ரபத்தி செய்தால் தொடர்பிறவி வராமல் மோக்ஷம் பெறலாம். ப்ரபத்தி என்பது பரந்யாஸம், ஸரணாகதி, பரஸமர்ப்பணம், ஆத்மநிகேக்ஷபம் என்று பலவாறாக கூறப்படுகிறது. மஹாபாபிகளாக இருந்தாலும் ஜனி ப்ராயஸ்சித்தம் செய்தால் தூயராகி விடுவர். ஆனால் அபயம் என்று வந்தவனை கைவிட்டவர்க்கு ளி உணி தாய்மை என்பது இல்லவே இல்லை. பேராசையினால், விரோதத்தினால், பயத்தினால் ஸரணாகதனை கைவிட்டவனுக்கு ப்ரஹ்மஹத்திக்கு ஸம்மான பாவம் வரும். அப்படிப்பட்ட ஸரணாகதி தர்மத்தை என்று சக்ரவர்த்தி திருமகன் அனுஷ்டித்து காண்பித்திருக்கிறான். அப்படிப்பட்ட ன் என்று சொல்லக்கூடிய ஸரணாகதியைப் பற்றி விஸேஷமாக ஸ்வாமி தேரிகன் மூன்று ஸ்தோத்ர ப்ரபந்தங்களிலே அருளிச்செய்துள்ளார்.*

**4**

## *ராமானுஜ-மத-கருத்துகள்*

***பரமாத்மா-***

**1.*ஸ்ரீநாராயணனே முழுமுதற்கடவுள்.***

**2. *அவனே உலகங்களைப் படைப்பவன், காப்பவன், அழிப்பவன்.***

**3. *அவன், எல்லா பொருள்களிலும் அந்தர்யாமியாக உள்ளிருந்து ஆள்கிறான்.***

**4. *அவனே மோக்ஷம் அளிப்பவன்.***

**5. *அவனை அடைதலே மோக்ஷம் ஆகும்.***

6. அப்படி அவன் இருக்கிறான் என்பதை ஸாஸ்த்ரங்கள் மூலமே அறிய முடியும்; வேறு வழியில் அறிய முடியாது. (ஸாஸ்த்ரம் வேதம் முதலியது).

7. அவனை உபநிஷத்கள் பலவிதமாகப் போற்றுகின்றன. ப்ரஹ்மம், பர - ப்ரஹ்மம், பரமாத்மா, பர-ஜ்யோதிஸ், பரதத்த்வம் (பரம்-பொருள்), ஈஸ்வரன், என்றெல்லாம் சொல்கின்றன.

8. ஆத்மா என்றால் உள்ளிருந்து ஆள்பவன் என்று அர்த்தம்; எல்லா பொருள்களுக்கும் உள்ளிருந்து கொண்டு அவனே ஆள்கிறான்; எனவே, அவன் எல்லா பொருள்களுக்கும் ஆத்மா.

9. எல்லா பொருள்களும் அவனது ஸரீரம் ஆனவை; அதாவது உள்ளிருக்கும் அவனால் ஆளப்படுபவை.

10. அவன் எண்ணற்ற கல்யாண-குணங்கள் உடையவன்; துளியும் தோஷம் அற்றவன்.

11. ஜ்ஞானம், பக்தி, கருணை, பொறுமை முதலிய அவனது கல்யாண - குணகுழுக்கள் எண்ணற்றவை; ஒவ்வொரு குணமும் எல்லையற்றதும் கூட.

12. அதேபோல, திவ்யமான திருமேனி அவனுக்கு உண்டு; திருமேனியுடன் பரமபத-உலகில் இருக்கிறான்.

13. அந்த பரமபத-உலகம் ப்ரக்ருதியிலிருந்து படைக்கப்பட்ட உலகம் அல்ல; அனாதிகாலமாக நித்யமாக இருப்பது. நித்யவிபூதி என்று பெயர்.

14. மேலும், அவனே விரும்பி பல திருமேனிகளை எடுத்துக் கொள்-கிறான்; அதற்கு அவதாரம் என்று பெயர்.

15. பரமாத்மாவான அவன் ஸ்வரூபம் ஜ்ஞான-ஸ்வரூபம் ஆகும்; அதாவது ஸ்வயம்ப்ரகாஸம் ஆனவன் என்று அர்த்தம்.

**16.** *அவன் ஆனந்த-ஸ்வரூபம் ஆனவன்; அதாவது என்றும் எல்லாருக்கும் அனுகூலம் ஆனவன்.*

**17.** *காலத்தாலும், இடத்தாலும், பொருளாலும் அவனை அளவிட முடியாது; எல்லா காலத்திலும், எல்லா இடத்திலும், எல்லா பொருளுமாக அவன் இருக்கிறான்; இதையே 'அனந்தம்' என்று சொல்வர்.*

*(நாவல்பக்கம் உ.வே.வாசுதேவாச்சாரியாரின் ஸ்ரீ பாஷ்யஸாரம்)*

